**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 388/2022** |
| **Ranking of witness** | **:** | **PW1** |
| **Name** | **:** | **R. விட்டோபதாஸ்** |
| **Father's Name** | **:** | **த/பெ. ராஜய்யா கவுண்டர்** |
| **Age** | **:** | **65** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15-10-2025.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையானார்.**

<u>முதல் விசாரணை:</u>

நான் நல்லம்பள்ளியில் குடியிருந்து அரசு பணியில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து ஓய்வில் இருந்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்த சீதாராமன் என் உடன்பிறந்த அண்ணன் ஆவார். கடந்த 17.01.2021 அன்று மாலை சுமார் 04.30 மணிக்கு, நான் நல்லம்பள்ளியில் உள்ள என் வீட்டில் இருந்தபோது, எனக்கு தெரிந்த மூர்த்தி என்பவர் போன் செய்து, நல்லம்பள்ளியில் உள்ள அரசு உயர் நிலை பள்ளி எதிரில், மணி என்பவரது டீ கடை முன்பு, சைக்கிளில் சென்ற என்னுடைய அண்ணன் மீது, சுமார் 10 நிமிடங்களுக்கு முன்பாக TN29–N–2382 என்ற பதிவெண் கொண்ட தடம் எண் 1A என்ற அரசுப் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அங்குள்ள மைதானத்தில் பொங்கல் பண்டிகை நடைபெற்றதால், கூட்டமாக இருந்ததாகவும், அதனால் என் அண்ணன் சீதாராமன் தனது சைக்கிளை வலது புறமாக தள்ளி சென்றபோது, இலளிகத்திலிருந்து அவருக்கு பின்னால் வந்த அரசு பேருந்தின் ஓட்டுநர் வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியதாகவும், தகவல் சொல்ல நான் உடனே சம்பவ இடத்திற்கு பார்த்தபோது, எனது அண்ணன் தலை மீது பேருந்தின் சக்கரம் ஏறி அவருடைய தலை நசுங்கி சம்பவ இடத்திலேயே இறந்துகிடந்தார். அருகிலிருந்த சைக்கிளும் நசுங்கிய நிலையில் இருந்தது. சம்பவ இடத்திலிருந்து சுமார் 20 அடி தொலைவில் விபத்தை ஏற்படுத்திய பேருந்து நின்று இருந்தது. அதன் ஓட்டுநர் அப்போது அங்கு இல்லை. அதன் பின்னர் அண்ணனின் உடலை ஆம்புலன்ஸ் மூலம் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். விபத்து குறித்து நடவடிக்கை எடுக்கக் கோரி காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் அந்த புகார் மனு **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் புகார் கொடுத்த காவல் நிலையம் சென்றபோது, விபத்தை ஏற்படுத்திய அரசு பேருந்து ஓட்டுநர் காவல் நிலையத்தில் இருந்தார். அவரை என்னால் அடையாளம் காட்ட இயலும். சம்பவத்தை நேரில் பார்த்த மூர்த்தி அடையாளம் காட்ட, நான் எதிரியை தெரிந்துகொண்டேன். ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநர் ஆவார். பின்னர் தருமபுரி அரசு

மருத்துவமனை சவக்கிடங்கில் நடந்த பிரேத விசாரணையில் உடன் இருந்தேன். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தைப்பற்றி புகாரை நான்தான் காவல் நிலையம் சென்று கொடுத்தேன். விபத்தை நேரடியாக பார்க்காததால், விபத்து சம்பவம் தொடர்பாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த நபர் என் உடன் பிறந்த அண்ணன் ஆவார். விபத்து குறித்து மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயத்தில் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. இறந்த நபர் என் அண்ணன் என்பதால் அவருக்கு இழப்பீடு வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**சாட்சியின் கையொப்பம்.** **தருமபுரி.**